# இளைஞர் ஆண்டு - 2020
## 'இளைஞரே, ஆற்றலோடு மாற்றம் நோக்கி...'
# பாலின சமத்துவ உறவுச் சமூகம் படைக்கும் இளைஞர்கள்
(01.03.2020)
# திருவழிபாட்டுக் குறிப்புகள்

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பான இறைமக்களே! இளைஞர் ஆண்டான இந்த 2020-ம் ஆண்டிலே, இளைஞர்களின் நலன் காக்க, பல்வேறு முயற்சிகளை நம் திருஅவையானது முன்னெடுத்து வருகின்றது. அதன் அடிப்படையில், தவக்காலத்தின் முதல் ஞாயிறு மற்றும் மார்ச் மாதத்தின் முதல் நாளுமான இன்று, 'பாலின சமத்துவ உறவுச் சமூகம் படைக்கும் இளைஞர்கள்' என்ற நடுப்பொருளைத் தியானித்து வாழ்வாக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். ஆண் பெண் சமத்துவம் என்பது, அணியும் ஆடையிலோ, அதிகாரத்திலோ, பதவியிலோ, ஆடம்பரத்திலோ, ஆரவார செயல்களிலோ வருவது அல்ல. மாறாக, அது, நம் நெஞ்சத்தில் உறையும் மனநிலையில் உருவாகுவது எனலாம். இயற்கையானது தன்னுடைய ஒவ்வொரு படைப்பிலும் பல்வேறு வேறுபாடுகளைத் தன் கலைநயமாகக் காட்டியுள்ளது. கதிரவனின் வெப்பமும் சந்திரனின் குளிர்ச்சியும் கடலின் அலையும் நிலத்தின் மேடுபள்ளங்களும் சிங்கத்தின் சீற்றமும் மானின் மருட்சியும் அதனதன் இயல்பு. அதுபோலவே, ஆணுக்கும் பெண்ணுக்கும் அவர்களுக்கே உரித்தான பல்வேறு இயல்புகளில் வேறுபாடு இருக்கலாம். ஆனால், அவர்களில் குடி கொண்டிருக்கும் மானுடம் ஒன்றே. இதை உணர்ந்து இறைவனின் இறையாட்சி உருவாக்கப் பணியின் அழைப்பை ஏற்று இணையாகப் பணியாற்றவே ஆணும் பெண்ணும் ஏன் மூன்றாம் பாலினத்தவரும் அழைக்கப்பட்டிருக்கிறோம். இளைஞரே விழித்தெழுவோம். பெண்களைப் போதைப் பொருட்களாக, பயன்படுத்தி தூக்கி வீசும் குப்பைகளாக என சித்தரிக்கும் ஊடகச் சிதறல்களில் சிக்கி உருக்குலைந்து, உணர்வை இழக்க வேண்டாம். ஆண் பெண் சமத்துவத்தையும், நலமான நட்பையும் கொச்சைப்படுத்தும் ஆபாச இணையத்தளங்களைப் புறக்கணித்து ஆண் பெண் கைகோர்த்து நட்பாலும், நலமானத் தூய அன்பாலும் சமத்துவ மாண்பைப் பாதுகாப்போம். பழகிப் போனப் பெண்ணடிமைத்தன மானச்சான்றை தூக்கியெறிவோம். ஆணாதிக்க ஊனத்தை உடைத்தெறிவோம். ஆண் பெண் நலமான நட்பில் சிறந்து விளங்கிய நம் நண்பன் இளைஞன் இயேசுவே நம் நல்வழிகாட்டியாகட்டும். அவர் வழிநின்று இறைபணியிலும் சமூகநீதி படைக்கும் பயணத்திலும் குடும்ப அறநெறியிலும் ஆண் பெண் பாலின சமத்துவ உறவுச் சமூகம் படைக்க இப்பலியில் இறைவேண்டல் செய்து பயணம் தொடங்குவோம்.

**முதல்வாசகம் : தொடக்கநூல் 2: 7-9, 3: 1-7**

அளவிற்கு மிஞ்சி உடலைக் கவர்ச்சிப் பொருளாக்கி சந்தைப்படுத்துவது, குறிப்பாகப் பெண்ணுடலின் மாண்பை மறுத்து நுகர்பொருளாகவும், அடக்கி ஆளும் பொருளாகவும், உருவாக்கும் போக்கு பாலினப் பாகுபாட்டின் அடித்தளமாக உள்ளது. முதல் பெற்றோரின் பாவமற்ற இயல்புநிலையைச் சிதைக்கும் விலக்கப்பட்டக் கனியைப் போன்று முதலாளித்துவ தத்துவமும் இன்றைய ஆண் பெண், சமத்துவ உறவுச் சமூகத்தைக் கூறுபோட்டு சந்தைப்படுத்துகிறது. கடவுளின் கரம் பற்றி ஆண் பெண் தனித்துவத்தை ஏற்று, மாண்புடன் மதித்து, பாலின சமத்துவ உறவுச் சமூகம் படைக்கமுதல் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசகம் : உரோ 5: 12-19**

தொடக்க காலத்திலிருந்து தொடர்ந்து வந்தப் பாவம், கீழ்ப்படியாமை, ஆணாதிக்கம்,பெண்ணடிமைத்தனம் அனைத்தும் இயேசு கிறித்துவின் ஏற்புடைய புதிய நம்பிக்கை நெறியால் அடித்து விரட்டப்பட்டன. இயேசுவின் புதிய நம்பிக்கை நெறியில் நமை இணைத்து பாவமற்றஅருள்வாழ்வு, அருட்பணியில் பேதமற்ற முழுமை, ஆண் பெண் சமத்துவம், இறைவனுக்கு நமை தற்கையளித்தல் போன்ற இறையாட்சியின் சமூகமதிப்பீடுகளில் நாம் வளரவும் நம் திருஅவை இவற்றால் புதுப்பிக்கப்படவும் இரண்டாம் வாசகத்தை வாழ்வாக்க செவிமடுப்போம்.

## மன்றாட்டுகள்

**1. நல்ல ஆயனே இறைவா!**

திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவறத்தார் அனைவரையும் நிறைவாக ஆசியால் நிரப்பியருளும். ஆண் பெண் சமத்துவம் நிறைந்த திருஅவையை உருவாக்கவும், அதன் மூலம் இந்த உலகையே மாற்றவும், அவர்கள் முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் நீர் தாமே உடனிருந்து காத்திட வேண்டும் என்று தாயும் தந்தையுமான இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2. உலகின் ஒளியே இறைவா!**

எங்கள் நாட்டின் தலைவர்களுக்காய் மன்றாடுகிறோம். பிறப்பு, வளர்ப்பு, கல்வி, வேலைவாய்ப் புமுதலிய அனைத்துதுறைகளிலும், ஆண் பெண் சமம் என்ற சிந்தனை சிறந்து ஓங்கினாலும், பெண்களுக்கு எதிரான குற்றங்களின் விகிதாச்சாரம் கூடிக் கொண்டே போகும் சூழலை நாங்கள் காண்கின்றோம். அரசு இயந்திரங்கள், தங்கள் பொறுப்பினை தட்டிக் கழிக்கும், அலட்சியமன நிலையை மாற்றி, சமத்துவம் பேணும் நல்ல சூழ்நிலைகளை ஏற்படுத்தும் வரம் தரவேண்டும் என்று தாயும் தந்தையுமான இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. உண்மையின் ஊற்றே இறைவா!**

பல்வேறு சிக்கல்களால் அமைதியிழந்து அல்லலுறும் குடும்பங்களுக்காக மன்றாடுகின்றோம். உறவுகளுக்குள் நிலவும் புரிதல் இல்லாமை, தனிமை உணர்வுகள், மனப்போராட்டங்கள், பொருளாதார பிரச்சனைகள், உறவுச் சிக்கல்கள், ஊடக அடிமைத்தனங்கள் ஆகியவற்றிலிருந்து, நீர் தாமே எம் குடும்பங்களைக் காத்து, இறையாட்சியின் மதிப்பீடுகள் விளையும் நிலமாகவும் பாலின சமத்துவம் பேணும் அடித்தளங்களாகவும் அவற்றை மாற்றிட வேண்டிய வரம் தரவேண்டும் என்று தாயும் தந்தையுமான இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. இளமையின் இலக்கணமே இறைவா!**

பல்வேறு சமூகத் தீமைகளின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் இளைஞர்களுக்காக மன்றாடுகின்றோம். தீமையின் ஆதிக்கம் தன் கொடூர கரங்களை எப்போதும் இளைஞர்கள் மேல் நீட்டிக் கொண்டிருப்பதை அவர்கள் உணரவும், தங்கள்முன் வாழ்வும், சாவும் ஒரு சேர வைக்கப்பட்டுள்ளதால், இறை ஆசியால் வாழ்வை பெற்றுக்கொள்ளவும், இனக்கவர்ச்சியே வாழ்க்கை என்ற மாய வலைக்குள் வீழ்ந்து சிக்கிக் கொள்ளாமல், சமத்துவம் பேணி, நலமான ஆண் பெண் உறவால் சாதனைகளை உருவாக்கவும் வரம் தரவேண்டும் என்று தாயும் தந்தையுமான இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. உறவின் வடிவே இறைவா!**

இயற்கை சீற்றங்கள், புயல் வெள்ளம், வெயில், வறட்சி, முக்கியமாகத் தொற்றுநோய்களால் பாதிக்கப்பட்டுள்ள இந்த பூமிக்காக மன்றாடுகின்றோம். இன்றைய சூழலில் உலகைப் பெரிதும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும், கொரோனா நோய்கிருமியின் தாக்குதலிலிருந்து எம்மக்களைப் பாதுகாத்தருளும். நீரே எம்மக்களோடு உடனிருந்து, எல்லா ஆபத்துகளிலிருந்தும் காத்திடும் வரம் தரவேண்டும் என்று தாயும் தந்தையுமான இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பரிந்துரைகள்:**

| விழிப்புணர்வு | சிந்தனை | செயல் |
|---|---|---|
| மறைக்கல்வி, இயக்கக் கூட்டங்களில் ஆண், பெண் இளைஞர்கள் இணைந்து பங்கேற்றல் | இயேசு ~ பெண்ணுரிமைக் காவலர், விவிலியப் பெண் ஆளுமைகள்~ அறிமுகம், பெண்ணுரிமைச் சிந்தனைகளை மையப்படுத்தி, தவக்கால சிறப்பு சிலுவைப்பாதை, ஆண், பெண்~ இணைந்து செயல்படுதலின் ஆற்றலை உணரச் செய்தல் | ஆண், பெண் உறுப்பினர்கள் நிர்வாகப் பொறுப்புகளில் சமப் பங்கேற்பினை உறுதிப்படுத்துதல் |
| பெண்களுக்கு எதிரான வன்முறை நிகழ்வுகளைக் குறும்படங்களாக உருவாக்குதல், திரையிடுதல் | வரதட்சனை பற்றிய கருத்துரை, பெண்ணடிமைத்தனத்திற்கான காரணங்களை ஆராய்ந்து, அறிக்கை தயாரித்தல், பெண்களுக்கான தற்காப்புக் கலைப் பயிற்சி | வரதட்சனை வாங்க அல்லது கொடுக்க மாட்டோம் என உறுதி ஏற்றல்<br>பாலியல் வன்கொடுகளுக்கு எதிரான பேரணிகளை நடத்துதல் |
| பெண்ணியலாளர்களுடன் உரையாடல் | பெணக்களுக்கான தலைமைத்துவ பயிற்சி | சாதனைப் பெண்களின் வெற்றிக் கதைகள் தொகுப்பு |

*- தயாரிப்பு: அருள்பணி. செனிபர் எடிசன், செயலர், இளைஞர் பணிக்குழு, கோட்டாறு மறைமாவட்டம்*

**ஒருங்கிணைப்பு:**
**தமிழக ஆயர் பேரவையின் இளைஞர் பணிக்குழு**
**இளைய தீபம்**
**கருமண்டபம், திருச்சி.**

# இளைஞர் குழுத் திருப்பலிக்கான வாசகங்கள்:

1. தொடக்கநூல் 1: 26-31
2. கலாத்தியர் 3: 25-29
3. லூக்கா 8: 1-8

**முதல் வாசகம் : தொடக்க நூல் 1: 26-31**

இன்றைய முதல் வாசகமானது, தொடக்க நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. கடவுள் மனிதரை அவரது உருவிலும் சாயலிலும் படைக்கின்றார். ஆணும் பெண்ணுமாகச் சரிநிகர் சமத்துவத்தில் படைக்கின்றார். ஆண் உயர்ந்தவன் என்றோ, இல்லை பெண்தான் உயர்ந்தவள் என்றோ படைக்காமல், இருவருக்கும் வெவ்வேறு இயல்பை தந்து, இணைந்து வாழ அழைக்கின்றார். பூமியையும் அதன் படைப்புகளையும், தங்கள் ஆற்றலுக்கு உட்படுத்தி, ஆளும் வரத்தை தருகின்றார். ஆணோ பெண்ணோ, இருவருமே இறைவனின் சாயல், என்பதையும், இருவரும் இணைந்தே, 'மானிடர்' ஆகின்றனர் என்பதையும் உணரவும், மனதில் ஏற்றுக் கொள்ளவும் வரம் வேண்டி வாசகத்துக்கு செவிசாய்ப்போம்.

**இரண்டாம் வாசகம் : கலாத்தியர் 3: 25-29**

இன்றைய இரண்டாம் வாசகமானது, திருத்தூதரான புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவனின் வாழ்க்கையானது, தூய்மையாக்கப்படுவது சட்டம் சார்பான செயல்களால் அல்ல, மாறாக, இயேசு கிறிஸ்துமீது கொண்ட நம்பிக்கையால், அவருக்கு கீழ்ப்படிவதால் உருவாகின்றது என்று இந்நூல் நமக்கு விவரிக்கின்றது. நாம் எப்போது திருமுழுக்குப் பெற்றோமோ, அப்போதே கிறிஸ்து இயேசுவோடு இணைக்கப்பட்டு விட்டோம். ஒருசெடியில் இணைந்து வாழும் கொடிகள் எவ்வாறு வேறுபாடுகள் அற்றவையோ, அவ்வாறே நாமும், ஆண் பெண் என்னும் வேறுபாடு அகற்றி, சமத்துவம் பேணும் வரம் வேண்டி வாசகத்தை கேட்டு வாழ்வாக்குவோம்.

(மார்ச் 08 அன்று கொண்டாடினால் மேற்கண்ட வாசகங்களைப் பயன்படுத்தலாம்.)

***- தயாரிப்பு: அருள்பணி. செனிபர் எடிசன், செயலர், இளைஞர் பணிக்குழு, கோட்டாறு மறைமாவட்டம்***